**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.37/2021 - PW-2**

| | |
|---|---|
| Name | திரு.குணாளன் |
| Father Name | திரு,வேலாயுதம் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 27.10.2025.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் பழைய SSLC படிப்பு படித்துள்ளேன். நான் கல்வித்துறையில் எழுத்தரவாக பணிபுரிந்து 2017-ல் ஓய்வு பெற்றுவிட்டேன். வாதியின் கணவர் அம்மூர் மேல்நிலைப்பள்ளியில் உடற்பயிற்சி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். வாதியின் கணவரும், நானும் நண்பர்களா என்றால் அவரும், நானும் ஆற்காடு நகரில் வசிப்பவர்கள் என்பதால் எனக்கு அவரை தெரியும். வாதியும், அவரது கணவரும் ஆற்காடு, பூபதி நகரில் வசித்து வருகிறார்கள். நான் ஆற்காடு ஜகநாதசாமி கோவில் தெருவில் வசித்து வருகிறேன். 03.02.2021-ம் தேதி தாவா கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையெழுத்து போட்டேன். வாதியின் கணவரோடு எனக்கு சுமார் 10 வருட கால பழக்கம் உள்ளது. வாதியின் கணவர் ஆசிரியர் பணி செய்வதோடு வட்டிக்கு பணம் கொடுக்கல் வாங்கல் தொழிலும் செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 03.02.2021-ம் தேதிய காலகட்டத்தில் தமிழ்நாட்டில் சட்டசபை தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டிருந்ததால் அதிகளவில் பணம் வெளியில் எடுத்து செல்ல முடியாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தப்பத்திரம் எழுதிக்கொள்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு அது பற்றி இரு தரப்பிலும் பேசப்பட்டதாக வாதி என்னிடம் தெரிவித்தார். அந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. அந்த ஒரு வாரத்திற்கு முன்பு நடந்த பேச்சுவார்த்தையில் யார்யார் கலந்துகொண்டனர் என்று எனக்கு தெரியாது. ஆற்காடு நகரில் வசிப்பவர்களில் பெரும்பாலானவர்களை எனக்கு தெரியும். அந்த வகையில் வாதி குடும்பத்தையும் எனக்கு தெரியும். கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போடுவதற்கு அந்த தேதியில் மாலை 5.00 மணிக்கு ஆற்காடு தாலுக்கா அலுவலகம் அருகே சென்றேன். கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போடுவதற்கு வாதி தான் என்னை அழைத்தார். நான் செல்வதற்கு முன்பே கிரைய ஒப்பந்தப்பத்திரம் தயார் செய்து வைக்கப்பட்டிருந்ததா என்றால் நான் அங்கு சென்ற பிறகு தான் தயார் செய்யப்பட்டது. ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் ஒரு கடையில் வைத்து கிரைய ஒப்பந்தப்பத்திரம் தயார் செய்யப்பட்டது. அந்த கடையின் பெயர்

ஞாபகமில்லை. சாட்சி கையெழுத்து போடுவதற்கு என்னை எத்தனை மணிக்கு வாதி அழைத்தார் என்றால் நான் வேறு வேலையாக வட்டாட்சியர் அலுவலகம் சென்றிருந்த போது என்னை பார்த்த வாதி சாட்சி கையெழுத்து போட அழைத்தார். கிரைய ஒப்பந்தப்பத்தித்தை ரவிச்சந்திரன் என்பவர் தயார் செய்தார். மொத்தம் 3 தாள்களில் தட்டச்சு செய்யப்பட்டது. கிரைய ஒப்பந்தப்பத்திரம் தயார் செய்வதற்கு வாதியும், பிரதிவாதி ரமணியும் விவரங்கள் சொன்னார்கள். பிரதிவாதியின் மகனை எனக்கு தெரியும். பிரதிவாதியுடன் பழக்கமில்லை. பிரதிவாதியின் மகனும், வாதியும் தான் கிரைய ஒப்பந்தப்பத்திரம் தயார் செய்தார்கள். கிரைய ஒப்பந்தப்பத்திரத்தை தயார் செய்தவர், சாட்சி கையொப்பம் செய்தவர்கள் அவரவர் விலாசங்களை அந்த கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். பிரதிவாதியின் மகன் கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் கையெழுத்து போடவில்லை. நானும், ஜெயலலிதா என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். ஜெயலலிதாவை யார் அழைத்து வந்தது என்று எனக்கு தெரியாது. நான் அங்கு செல்வதற்கு முன்பே ஜெயலலிதா வந்துவிட்டார். ஜெயலலிதா என்பவரை வாதிக்கு எவ்வாறு தெரியும் என்று எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள தொகை எந்த வகை ரூபாய் நோட்டுகளாக கொடுக்கப்பட்டது என்றால் 500 ரூபாய் நோட்டுகளாக கொடுக்கப்பட்டது. வாதியின் கணவருக்கும், பிரதிவாதியின் மகனுக்கும் இடையில் கடன் கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எல்லோரும் ஒரே பேனாவால் கையெழுத்து போட்டோமா என்றால் நான் எனக்கு கொடுத்த பேனாவை வைத்து கையெழுத்து போட்டேன். மற்றவர்கள் எந்த பேனாவால் கையெழுத்து போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தப்பத்திரத்தை நான் படித்துப் பார்த்தேன். வாதி குறிப்பிட்ட காலத்திற்குள் பாக்கி கிரைய தொகையை கொடுத்து கிரைய பத்திரம் எழுதிக்கொள்ளவில்லை என்றால் வாதி கொடுத்த முன் பணத்தை அவர் இழக்க நேரிடும் என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு எழுதப்படவில்லை. 5 மாத கால கெடுவிற்குள் கிரையப்பத்திரம் பதிவு செய்து கொடுக்கவில்லை என்றால் வாதியின் சொந்த செலவில் கிரையப்பத்திரம் பதிவு செய்துகொள்ள வேண்டுமென கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது. கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டதற்கு பிறகு இன்று வரை நான் அந்த கிரைய ஒப்பந்தப்பத்திரத்தை பார்க்கவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தப்பத்திரத்தை பார்க்காமல் தான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இந்த வழக்கில் சாட்சி சொல்ல வரும் போது பார்த்தேன். நான் சொல்வது போல் கிரைய ஒப்பந்தப்பத்திரம் எதுவும் வாதி, பிரதிவாதிக்கு இடையில் ஏற்படவில்லை என்றாலும், நான் வாதியின் கணவரின் உற்ற நண்பர் என்பதால் வாதியின் கணவரோடு சேர்ந்து பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக போலியாக கிரைய ஒப்பந்தப்பத்திரத்தை தயார் செய்துள்ளோம் என்றால் தவறு. நான் வாதியின் கை ஆள் என்றாலும், போலியாக தயாரிக்கப்படும் ஆவணங்களில் நான் சாட்சி கையெழுத்து போடும் நபர் என்று சொன்னாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.